ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2481/ 16 - 2026 මාර්තු මස 26 වැනි බ්‍රහස්පතින්දා - 2026.03.26
2481/16 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 26 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

39 (அ) (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

2004, திசெம்பர் மாதம் 01 ஆம் திகதிய 1369/15 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவிள் காப்புவாசகம் (அ) வின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 2004 ஆம் ஆண்டின் 153 ஆம் இலக்க கட்டளையில் குறிப்பிட்ட காணித் துண்டுகளினை முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளதோடு, அரசின் சார்பில் அச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக் காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எனினும் அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் குரகமகே தொன் லால் காந்த ஆகிய நாள், குறித்த காணித் துண்டுகளில் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டினை இக் கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.

கே.டி. லால் காந்த,
கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

எனது இல. : 13/99/VEP/223-1.
காணி எடுத்தல் உத்தியோகத்தர் இல. : KDS/HAT/4/1/2/AQ/01.
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி
மற்றும் நீர்ப்பாசன அமைச்சு,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2026, பெப்புருவரி 12.

அட்டவணை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், ஹதரலியத்த பிரதேச செயலாளர் பிரிவில், 334 - கலோட்டுவாவ கிராம அலுவலர் பிரிவில், கலோட்டுவாவ கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இறுதி கிராம வரைபடத்தில் 176 ஆம் இலக்க, 2005.08.30 ஆந் திகதிய, இறுதி கிராம வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்ட பின்வரும் பெயர், விஸ்தீரணத்தைக் கொண்ட காணித் துண்டின் எல்லைகள்:

**01. துண்டு இல. 324 – ஹத்பேவவத்தை - விஸ்தீரணம்: 10.1275 ஹெக்டயார்.**

வடக்கு : இ.கி.வ. 176 இல் துண்டு இல. 49, 64, 66, 222, 223, 224 மற்றும் 70; கிழக்கு : இ.கி.வ. 176 இல் துண்டு இல. 72 (டொக்காபத கால்வாய்), 73 மற்றும் 74 ; தெற்கு: இ.கி.வ. 176 இல் துண்டு இல. 75, 76, 78, 83 மற்றும் 49; மேற்கு : இ.கி.வ. 176 இல் துண்டு இல. 49.

EOG 03 - 0209